ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

பத்திரிகை கிரயம்.
வருஷம் 1-க்கு ரூ 1 அ 12 பை 0
மாஸம் 6-க்கு ரூ 1 அ 0 பை 0
மாஸம் 3-க்கு ரூ 0 அ 9 பை 0
தனி 1-க்கு ரூ 0 அ 3 பை 6
இங்கிலீஷ் வருஷம் 1-க்கு
ரூ 2—4—0.

௨-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வதாரி ௵ சித்திரைமீ உ௰௨-க்கு ௧அஅஅ ௵ ஏப்ரல் மீ ௨௰௨ திங்கட்கிழமை. { இலக்கம்-௰௧.

ஸம்வித்³யா.

[illegible]

ஸத்வித்யா.

ஐயா பத்திராதிபரே!

தமது பத்திரிகையின் அநுபந்தத்தில் ஸ்ரீமத் சுந்தர ராஜாசாரிய ரெழுதிய விஷயங்களைக் கண்ணுற்றேன். அதில், ஸ்ரீராமன் சிவ பக்த ரல்லாமலும் சிவாவதாரம் அல்லாமலு மிருத்தலால், அவர் திருநீறு தரித்தல் கூடாதென்று வெகு விரிவாய் எடுத்துக் காட்டி யிருக்கின்றார். ஸ்ரீமத் சங்கரபகவத்பாத முனிவர் கோமா னருளிய திவ்விய ஸித்தாந்தத் தைக்கொண்ட எம்போலியர்க்கு இச் சைவ வைணவ விவாதம் ஆவசியமில்லாமலிருப்பினும், நம்மவ ரெழுதியதைக் கண்டு திங்கரும் கண்ணுதற் பிரான் திருத் தொண்டர்கள் மனங்களிக்க, யாம் சாஸ்திரங்களில் கண்டுணர்ந்த பல பிரமாணங்களால, நமது ஆசாரியா ரவர்கள் எடுத்துக் காட்டிய பல நியாயங்கள், அநேக பிரமாணங்களால் ஸ்ரீ இராமனுக்குச் சித்திக்குந் திருநீற்றை மாற்ற வலிமையற்றன என்பதை எடுத்துக்காட்டப் புகுந்தோமே யன்றி வேறல்ல.

துவக்கத்திற்றானே நமது ஆசாரிய ரவர்கள் "இராவணனால் வருத்த முற்ற தேவர்களின் வேண்டு கோளின்படி பரம கிருபா நிதியாகிய, பரம பத்தராகிய ஸ்ரீமந் நாராயணன், தாமே ஸ்ரீ இராமன் திருவடிவமாய் அயோத்தியா நகரிற் றிருவவதாரஞ் செய்தா ரென்று இராமாயணங் கூறுகின்றது" என்றும் "அதனால் ஸ்ரீ இராமன் விஷ்ணுவின் அவதாரமே யன்றி, சிவாவதார மாகுதல் எவ்விதத்தாலுங்கூடாது" என்றனர். இஃது எவ்வித மொப்பக் கூடும்? ஒருவர், வேதப் பிரமாணத்தைக்கொண்டு "ஸ்ரீ இராமன் பரமசிவ பிரானது திருவவதார" மென வெடுத்துக்காட்டப் புகுந்தால், அதற்கு விரோதமாய் அவ்வேதப் பிரமாணத்திற்கு ஒப்பில்லாத அதின் கீழான மற்றை யெப்பிரமாண வசனங்களை எடுத்து விரித்திடினும் அஃது ஒப்பப்படுமோ? "இராமதாபினீயமென்னும் உபநிடதம், ஸ்ரீ இராமன் சிவாவதார மென்பதில் அஃது பிரமாண மாகுமோ?" என்பதைப் பற்றிப் பிறகு விசாரிப்பாம். மேலும் "சனகர் முதலிய விட்டுணு

[illegible]

பக்தர்கள் என்று ஸ்ரீஇராம இரகஸ்யோபநிடதத்திலிருப்பதால், இராமன் விட்டுணுவின் அவதாரமென்பதற்கதுவுமோர் பிரமாணம்,, என்றார். அவ்விடத்தில் எந்தச் சொல் ஸ்ரீஇராமன் விட்டுணுவின் அவதாரமென்று வெளியிடுகின்றதோ அதைமட்டில யாமறிய விளக்கித் தீட்டிக் காட்டினர்களில்லை. நமது ஆசாரிபரவர்கள் கொண்ட கொள்கைக்கு நேர்மாறாகவே, அவ்விராம ரகஸ்ய உபநிடதம் ஸ்ரீஇராமன் பரமசிவனது திருவவதாரமெனக் குறிக்கத்தக்க வசனங்களைப் பெற்றிருக்கின்றது. எங்ஙனமெனில், அவ்வுபநிடதத்தில் "ஸ்ரீஇராமன் அங்கங்களை எமக்குக் கூறு,, என்றோர் வினவையெடுத்து அதற்கு விடையாய் "விககினேசுவரர், சரஸ்வதி, துர்க்கை, க்ஷேத்திரபாலர், நாராயணன், நரசிம்மன், வாசுதேவர், வராகமூர்த்தி,, என்று எழுதப்பட்டிருக்கின்றது. இந்தவாக்கியத்தில், நாராயணன் ஸ்ரீஇராமனுக்கு அங்கதேவதையாக வெளிபாவதாலும், பரமசிவன் அவ்வித அங்கதேவதையாகக் கூறப்படாமையாலும், அங்கு முக்கிய தேவதையாய்க் கூறப்பட்டுள்ள ஸ்ரீஇராமன், எமது பிறைசூடிப் பிரான்திருவம்சமாயமையவதரிதோ? இது நிற்க. மற்றவர் கூறியதை மறுக்கவெழுந்த நமது ஆசாரியர், விஷ்ணு பதத்திற்கும் மகாவிட்டுணு பதத்திற்கும் பொருள் வேற்றுமையில்லை என்றார். அது அவ்வளவாக உசிதமாகாதென்க. "மகேந்திரன், மகாராஜா என்கிறசொற்கள் இந்திரனையும் இராசாவையுங் குறிப்பதுபோல, மகாவிட்டுணு வென்னுஞ்சொல் விஷ்ணுவைக்குறிக்குமென்று சாற்றினர். அவ்விடம் இந்திரனென்னும் சொற்றிற்கும் மகேந்திரனென்னும் சொற்றிற்கும் ஓர்வகைப் பொருளவேற்றுமையற்றிருப்பினும், ஒன்றுக்கொன்று பொருள்படுவதில் ஏற்றத்தாழ்வுண்டு. இந்திரனென்னுஞ்சொல், செல்வத்திலிருந்தவனென்பதைப் பொருளாகக் கொள்ளும். மகேந்திரனென்னும்பதமோ! விருத்திரனென்றும் அசுரனைக்கொன்றவனென்றும் சேர்த்துரைக்கும். அதுகொண்டே சோமயாகஞ்செய்தவர்கள் ஓர் ஸம்வத்ஸரம் வரையில் இந்திரனைக் குறித்து யாகமும், பிறகு மகேந்திரனைக் குறித்து யாகமும் செய்வதாய் ஏற்பட்டிருக்கின்றது. இந்திரன் என்பதற்கும் மகேந்திரனென்பதற்கும் பொருள வேற்றுமையில்லாதில், இவ்வித ஏற்பாடு பொருந்தாதன்றோ? இங்ஙனமே மீமாஞ்சையிலனேகசித்தாந்தங்களுண்டு. இராசாவென்னுஞ் சொற்றிற்கும் மகாராஜாவென்னுஞ் சொற்றிற்கும் எக்காலத்துந் தாரதம்மியமுண்டென்பதற்கையமின்று. திருவனந்தபுர முதலிய விடங்களில் பட்டம்பெற்றவரே மகாராஜாக்களென்றும் மற்றவர் ராஜாக்களென்றும் அழைப்பதை அவர் அறிந்திருக்கலாம். மகேசுவரனென்னும்பதமோ நிகண்டுகளிற்றானே பரமசிவனுக்குப் பெயராக வமைக்கப்பட்டுள்ளது. ஆதலால், விஷ்ணுவென்னுஞ்சொல் எக்கருத்தில் நாராயணனது பெயராகின்றதோ அக்கருத்திலினும் வேறாய் மற்றொரு கருத்தைக் கொண்டே மகாவிட்டுணுவென்கிற பதத்தை விநியோகித்தல் வேண்டுமென்பது திண்ணம். இனி அக்கருத்தின் வேற்றுமை எங்ஙனமெனில் "யோகிகள் ஆநந்திக்கின்றார்கள்,, என்று தொடங்கி இராம பதத்தின் பொருளை விளக்கவெழுந்த வசனத்தில் ப்ரம்மசப்தமிருத்தலாலும், அது பெரிதென்றும் பொருள் கொடுத்தலாலும், இங்குசர்வகாரணத் தன்மையே விஷ்ணு பதத்தினும் மகாவிஷ்ணு பதத்திற்கு அதிகப் பொருளென்றறிக. காரண

[illegible]

[illegible]

வத்துவைப்பற்றி ஆராயுங்கால் "இவையெல்லாம் பிரமன், விஷ்ணு, ருத்திரன், இந்திரன் அவர்கள் பிறக்கின்றார்கள்; காரணமபிறப் பதில்லை; காரணங்களைச் சிருட்டித் தவனும் ஆதியில் உலகச்சிருட்டியை சங்கற்பித் தவனும் சர்வகாரணனுமாயுள்ள வனே தியானிக்கத் தக்கவன்; அவனே ஆகாயமத்தியிலுள்ள சம்பு,, என்று தொடங்கிய வாக்கியங்கள் குணோபசங்கார நியாயத்தால் பரமசிவனே காரணவத்துவென ப்புலப்படுத்துகின்றன. வைகானசத்திலும் நான்குவித வைகுண்டங்களில் விட்டுணு, மகாவிஷ்ணு, சதாவிஷ்ணு, சர்வவியாபி நாராயணன் இவர்க ளிருப்பதாகச் சொல்வதில் இப்பதங்களெல்லாம் ஒரே பொருளைக் குறிக்குமாயின், அங்கெடுத் துக்காட்டப்பட்ட வைகுண்ட தாரதம்மிய மெங்ஙன மொக்கும். "விஷ்ணுவின் பரமபத" மென்னும் வசனமும உபக்கிரமத்தைத் தழுவி, விஷ்ணுவினு லடையப்படத் தக்க விடமென்றே பொருள் கொடுக்கும். மேலும், "சிவோ மாராம சந்திர மந்திரந்தின் தேவதையான ராமன்,"இராமன் முக்கண்ணன்,, என்று தொடங்கிய வசனங்களால் சிவனென்று வெளிப்படினும், நரசிம்ம பீஜத்துடன் கூடிய பஞ்சவக்திர அனுமந்த மந்திரத்தை ஜபிக்கும் பொழுது, அவ்வனுமந்தனை நரசிம்மனாகத் தியானித்தற்போல, இவ்வசனம் இந்தமந்திரத்தில் வேறு தேவதைகளின் பீஜாக்ஷரங் கலந் திருப்பதால், தவ்வித உருவத்தை இராமனுக்குக் காட்டியிருக்கலாம்" என்றார். இவ்விதம் திருட்டாந்தத்தில் மந்திர தேவதையி னுருவத்துடன் சேர்ந்தபீஜாக்ஷர தேவதையி னுருவம் சொல்லப் படுகின்றது. தார்ட்டாந்திகத்திலோ! உள்ளரூபத்தை மாற்றி அப்பரம சிவனுடைய ரூபத்தையே தியானிக்கும்படி வெளியாகின்றது. ஆதலால், முன்சொல்லிய யுக்தி உபயோக மற்றதென்றறிக. இனி முக்திகோபநிடதத்தில் "விஷ்ணுவாகியஎனது நிச்சுவாசம்" என்று தொடங்கிய ராமன் வசனங்களும், அவர் சிவரூபமென்று முக்கிய பிரமாணத்தா லேற்பட்டதால் அதற்குத் தக்க படியே பொருள் படுத்தவேண்டும். மீண்டும் இராமன் சிவபக்தனெனக் கொண்டாலும், அவர் வாக்கியங் களிலுள்ள தன்மைச் சொற்களுக்கு பிரதர்த்தனோபதேசப் பிரகரணத்தில் இந்திரனது தன்மைச் சொற்களைப் போல் கௌணவிர்த்தி முடியும். இனி "இராமனதுமந்திரத்தை ருத்திரன் ஜபித்தார்" என்றுதொடங்கி யவசனங்களும், குணிருத்திரனைப் பற்றின வாதலால், இராமன்பரமசிவ பக்தரென்பதில் யாதுந்தடையில்லை. அநுமானைச் சிவபீடத்தில் பூஜித்தலால், அவரைச்சிவாவதார மெனச்சொல்வதமையாது. விஷ்ணு பாதத்தில், பிதிர் தேவதை களுக்குப்பிண்டமளித்தலால் அப் பிதிர் தேவதைகள் விஷ்ணுவி னவதாரமாவார்களோ? "இராமனைச்சிவன் பூஜித்தால் அவ்விராமன் சிவபக்தரும் சிவாவதார மாகமாட்டார்" என்பதும், விஷ்ணுவி னவதார மாகிய பரசுராமனை இராமவென்ற கதையாலும், இராமன் அசுவமேதத்தால் பரமசிவாராதனஞ் செய்தகதையாலும் அவருக்கிருந்த விஷ்ணு அவதாரத்தன்மை கெட்டதோ? துரிய விஷ்ணுவே இராமாவதாரஞ் செய்தா ரெனில் எடக்கு யாதொரு ஆசங்கையு மில்லை. அப்பொரு ளொன்று, அதற்குப் பெயர்கள் சதாசிவனென்றும், மகாவிஷ்ணுவென்றும், பரப்பிரமமென்றும் பலவுள. ஆயினும் இராமானுஜாசாரியர் முதலிய வைணவ சித்தாந்த பிரவர்த்தர்களாகிய முன்னோர்சுறியாத "துரியவிஷ்ணு ஒருவருண்டு" என்கிற புதுமையொன்றே இங்கு இனி எழுதின் பெருகும்.

மொழி பெயர்ப்பு. கல்லிடக்குரிச்சி சந்திரசேகரசாஸ்திரி.

[illegible]

ஸ்ரீரஸ்து.

ஒருவர் எழுதுகிறார்.

ஐயா,

ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்களே! தமது மேன்மை தாங்கிய பத்திரிகையின் ஓர் மூலையில் இவ்விஷயத்தை பிரகடனஞ் செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

யான் தமது பத்திரிகையின், டைப்பு ஒன்றாவது நம்பர் புஸ்தகத்தில், ஓர் சிறந்த பண்டிதர் நமதேசத்துப் பாகவதர்களைப் பற்றி வரைந்த ஓர் உபந்நியாசத்தைக் கண்டுமிக ஆனந்தமடைந்தேன். அவர் எழுதிய சொல்லின் சுவையால் மனம் பரவசமாயிற்று. ஆயினும் எல்லை கடந்த பெரியோர் நிந்தையால் உடனே மனம் வாடியது. இவ்வித்துவான் எழுதியபடி அவர்களுள் எடுத்துரைக்கத் தக்க சிலகுற்றங்களிருப்பதுண்மையே. ஆயினும், அவைகளை அம்மட்டில் எடுத்துரைப்பது குற்றம் பிடிப்போர்க் கழகேயொழிய, குணத்தை யுணர்பவருக் கழகல்லவே? பெரியோர் அவர்களிடம் பலகுற்றங்களிருப்பினும், அவர்கள் நாராயணனிடம் பரமபக்தி செய்தல் ஒன்றுமாத்திரமாயிற்றானே அவர்களைக் கொண்டாடுவார்கள். ஆயினும் நம் பண்டிதர் அவர்களிடம் குற்றங்களை யகற்றி குணங்களை மேல் காட்டிச் சீர் திருத்தம் செய்ய வேண்டுமென்று இவ்விதம் எழுதியிருக்கிறார். ஆயினும் இவ்விதக் கருத்தை யறியும்படியான அறிஞர் சிலரே. இதைக் கண்ணுற்று, இதில் தமக்கு வேண்டிய பாகத்தை மட்டில் எடுத்து மற்றவரை தூஷிக்கவே கங்கணம் பூண்டவர் பலரிருப்பார்கள். அவர்களுக்கு உபந்நியாசகர் நோக்கம் அவசியமில்லை. ஆதலால் அவர்களை நோக்கி நான் இவ்விதம் எழுதத் துணிந்தேன்.

உலகத்தில் எப்பாடு பட்டாயினும் தனது குடும்பத்தை ரக்ஷிக்க வேண்டுமென்று மனு முதலிய பெரியோர்கள் சொல்லியிருப்பதால், அவ்வித முக்கிய தருமத்தை நிறைவேற்றச் சுருதி இதை விருத்தியாகக் கைகொண்டால் அதற்குக் குற்றம் ஏது? உலகத்தில் தமது குடும்ப விருத்தியை துறந்து எக்காலமும் மனதில் ஸ்ரீமந்நாராயணனை யாதல் ஸ்ரீ பரமசிவனையாதல் வழிபட்டு வருபவர்களுக்கு, தேசகால தோஷங் குடிகொண்ட இக்கலியுகத்தில், ஸ்ரீபகவானேனும் பரமேசுவரனேனும் தாமே தமது திருவாக்கின்படி நேரில் வந்து அவரது குடும்பத்தை ரக்ஷிப்பாரோ? அல்லது மிருதங்க முதலிய உபவாத்தியங்களை விட்டொழித்துத் தனியே வெளிவந்து பகவானை பஜித்துக் கொண்டு தெருவுடன் போகும் ஒருவனைப் பார்த்து எந்த மனிதனாவது தனது வேலைக்காரரை அவருக் கக்ஷதையிடும்படி ஏவுவானோ? எந்தப் பெண்ணேனும் பெரிய பாத்திரத்தில் தூண்டுல பிக்ஷை அளிப்பளோ? அவர்கள் வீதிதோறும் சுழன்றுவரலாம். ஆனந்தங் கொண்டாடலாம். வாயில் வந்தபடியெல்லாம் சொல்லாம் கையில் சூத்திரத்தைக் கொள்ளலாம் சமூத்தில் பெருங்கயைத்தைத் தூங்க விடலாம். வெட்கத்தை ஒழிக்கலாம். தம்புரா மீட்டலாம். தாளத்தைப் போடலாம். இறுமாப்புடன் நடக்கலாம். எல்லாக் குற்றங்களையும் அகற்றி அவரைச் சுத்தியாக்குங் கருவி பகவான் நாமமே. "சங்கேதமாயாதல் பரிகாச மாயாதல் வீண்வார்த்தையாயாதல் விளையாட்டுக்காதல் வைகுந்தன் திருநாமத்தை வழங்கின்

[illegible]

அது பலபாவங்களைப் போக்கும்,, என்றிருப்பதை அவர் கண்டிலரோ? ஜாபாலி மகரிஷியும் "வீட்டை விரும்புவோன் ஸ்ரீ அரியினது திருநாமங்களைச் சபிப்பான், தியானிப்பான, கானஞ்செய்வான்,, என்றனாக்கவில்லையா? இனி மனு பிராமண தர்மங்களைச் சொல்லுமிடத்து "ஆட்டம, பாட்டு, வாத்தியம் வாசித்தல் இவைகளைக் கொள்ளற்க,, என்று சொன்னதில்லையோ? எனில், அது பகவன் நாமத்தை நீங்கிய கேவல கானவிஷயம் என்றே கொள்ளவேண்டும். ஏனெனில், நாம் முற்காட்டிய ஜாபாலி வசனத்தாலும "கேட்பார்கள், கானஞ் செய்வார்கள், சொல்வார்கள் சாதுக்கள்,, என்று ஸ்ரீ பாகவத வசனத்தாலும் விளங்கும். இனி நமது தோழர், பண்டிதர் அவர்களிடம் சொன்ன குற்றங்களைக் கவனிப்பாம். "கிருஷ்ணஷ்டமி இராமநவமி முதலிய காலங்களில்,, என்று தொடங்க அவர் எழுதின்து அவ்வளவு உசிதமல்ல. அப்பாகவதர்கள், அவதாரயா என்னுஞ் சொல், ஆடல் பாடல் முதலியவற்றைக் குறிப்பதென்றெண்ணினாரில்லை. கடவுளை நோக்கிப் பிரார்த்திக்குங்கால் கவனிக்கவேண்டுமென்கிற பொருளிற்றானே உபயோகிக்கிறார்கள். நிற்க, நமது நண்பர் "இவ்விதம் எழுதியதால் சத்குரு, ஜயதேவஸ்வாமிகள் முதலியவர்களை யாம் நிந்திகக வந்தோமில்லை,, என்று சொல்லியும், உடனே ராதை என்பவள் அபுண்ணிய சரிதை என்றும், அப்பிரமாணமான பிரபந்தங்களில் கூறப்பட்டவளென்றும் மற்றுமேதோ வெழுதினர். இஃதிப்படியிருக்க ஜயதேவரை தூஷிப்பது யாங்ஙனம்? அவர் தாமெழுதிய கீதகோவிந்தமென்னும் புத்தகத்தில், அவ் விராதையினிடம் ஸ்ரீ கண்ணபிரானுக்குக்காதலை வர்ணிந்தாரல்லவோ? அவர் பிரபந்தத்தையும் பிரபந்தநாயகியையும், தூஷித்தல் அவரை தூஷித்ததாகவாகாதோ? அவ்விராதையின் சரித்திரத்தைப்பற்றி எமக்கு யாதொரு பிரமாணமும் கிட்டாவிடினும், இருக்குமென்றே யெண்ணவேண்டும். அவர்கள், பிரமாணமாகிய பாகவத முதலிய கிரந்தங்களிற் றிரட்டிய ருக்குமணி விவாகம் முதலியவற்றை விடுகிறார்களா? இல்லை. சொல்லுகிறார்களே. ஏகாதசி முதலிய தினங்களில் கண் விழிக்கும்பொருட்டு, கட்டுக் கதைகளாலும் வேடிக்கைக் கதைகளாலும் காலத்தைப் போக்குவது, பகவத்குணங்களை கேட்கத் தடையாய நித்திரையைத் தடுக்கவேயன்றி வேறில்லை. ரும் ரும் என்று சொல்வதால் யாது குறைவு. அது ஸ்ரீ இராமனது ஏகாக்ஷர மந்திரமல்லவோ? அம்மந்திரத்தினும் உத்தமமான மந்திரம் வேறுளதோ? இம்மந்திரத்தின் பெருமை முக்திகோபநிடதத்திலும் கலிசந்தரணோபநிடதத்திலும் நன்றாய் வெளியிடப்பட்டிருக்கின்றது. இக்கலியுகத்தில் கபீர்தாஸ் முதலியவர்கள் பகவத்பக்தி செய்தவர்களாகையால், அவர்களுடைய பாஷாந்தர கானங்களை நம்மினால் செவிதியாது? பாகவதம் முதலிய புத்தகங்களிலுள்ள குசைலவன சரித்திர முதலியவற்றை அவர்கள் தள்ளுகிறதில்லை. அனேகர் சம்ஸ்கிருத பாஷையிற்றானே கதை செய்கிறார்கள். சிலர் அம்மொழியை யறியாது தாமறிந்த பாஷையிற்றானே கதையை நடத்திவருகிறார்கள். அதுவுமொரு குற்றமாகுமோ? உலகத்தில் குற்றங்களை ஆராய்ந்தால் எங்குமகப்படும். அதை உரைப்பது எதற்கழகோ? நம்பண்டிதர், தாம் வரைந்ததற்குப் பதிலெழுதக் கிளம்பினதாக யெண்ணாது, குற்றங்களுளதேல் அவைகளைப் பொறுத்தருளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மொழிபெயர்ப்பு.

இங்ஙனம்

சுந்தரராஜசாஸ்திரியார் சீடர்.

[illegible]

மடாதிபதிகளுக் கோர் விண்ணப்பம்.

ஐயா பத்திராதிபரே அனேக வந்தனங்கள்.

மடாதிபதிகள் விஷயமாய் யாமெழுதிய சில மொழிகளை ஆராய்ந்து அது உசிதமாயின், உமது பத்திரிகையின் ஓர்கோணத்தில் வெளியிடவும், அப்படிக்கில்லாவிடில் காரணத்தை விளக்கவுங் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மடாதிபதிகளுக் கனேக வந்தனங்கள்.

ஐய! வேதாந்த சம்பிரதாயத்தைத் தீட்டிக் காட்டவெழுந்தருளி, உலகத்தார் பூஜிக்கத்தக்கவுயர்ந்த பதவியையடைந்து, அவ்வம் மடங்களின் ஆதிபத்தியததை வகித்த பெரியோர்களின் திருவடித் தாமரைகளி லனேக வந்தனஞ்செய்து யாம்தெரியப் படுத்திக் கொள்வதி யாதெனில்.—

முன் ஓர்சமயம் நம்தேயத்தில் துன்மத வெள்ளம் பெருகி சன்மதம் ஒழிய, அதைக்கண்டு மனமுருகிய அறிஞர்களை அனுக்கிரகிக்க அரனது திருவம்சத்துடன் ஆதிசங்கரர் அவதரித்தாரென்றும், அவர் பூமியிற்பிறந்து பல துன்மதங்களை வென்று நம்மதமே உண்மையென்று அதையே பாராட்டி பலமகாக்கிரந்தங்களை இயற்றி அவைகளை எங்கும்பரவச்செய்யவும், அவ்வப்பொழுது உதிக்குந் துன்மதங்களை அகற்றவும், தம்மால் ஏற்படுத்தப்பட்ட மடங்களில் சீடர்களைதாபித்துமீண்டும் மாதேவன்றிருவடியை யடைந்தாரென அவரது திவ்விய சரித்திரத்தில் வெளியாகின்றது. இவ்விதமேஸ்ரீமது ராமாநுஜாசாரியர் முதலிய பெரியோர்களுடைய சித்தாந்தத்தைக் கைகொண்டு அவ்வை வழிபடும் அவ்வச்சித்தாந்திகளும் அவ்வாசாரியர்களை அவதார அம்சமென்றே சாற்றுகின்றனர். நிற்க. உண்மதவிஷயங்களில் ஆராயவேண்டியது எமக்கு யாதுமிலது. இக்காலத்தில், கலியின் கொடுமையாலோ? ஆரியமதத்தின் அதிர்ட்டக்குறைவாலோ? நம்மவர் உண்மதச் சண்டை ஒழியாமை யாலோ? அல்லது நம்மவர் யோகாநுட்டானத்தால் உலகத்தை மறந்திருப்பதாலோ? கிறிஸ்துவசமயம் மறுக்கக்கூடாத வலிமைபெற்றிருப்பதாலோ? அம்மதத்தர்கள் உத்தமாதிகாரங்களைப் பெற்றிருப்பதால் அம்மதத்தைக் கண்டிக்கப் புகுதல் அவர்களுக்குச் சினமுண்டாகு மென்றோ? அம்மதம் ஓர்மதமாகாதென லட்சியம் செய்யாமையாலோ? அல்லது இம்மத பலபண்டிதர்களால் ஆங்காங்கு கண்டிக்கப்பட்ட விஷயம் அதைக் கண்டித்தல் எமக்கு அநாவசிக மென்றோ? எக்காரணத்தாலோ? அறியேம். தமது மேலான கனம் இவ்வுலகத்தின் ஆரிய சகோதரர்களுக்கு அந்நியமதத் தர்களாலுண்டாகும் குறைவுகளைக் கவனித்ததில்லை. அந்தோ! கலியின் கொடுமையை யாதுரைப்போம். இனி சொற்பகாலம் இம்மௌன நிட்டையை சன்னிதானங் கைகொள்ளுமேல் எமக்குக் கிடைக்குமோட்சம் எமது மதத்திற்கும் கிடைக்குமென்பதிற் றடையில்லை. ஆதலால், ஆரியர்கள் விஷயத்தில் தயை கூர்ந்து ஆங்காங்கு பட்டணங்களிலும், கிராமங்களிலும் மற்றெங்கும் பண்டிதர்கள் நிறைந்த ஓர் சபையை உண்டாக்க வேண்டும். சம்ஸ்கிருதம், தமிழ், இங்கிலிஷ முதலிய பாஷைகளில் புத்தகங்கள், பத்திரிகைகள் வெளியிட வேண்டும். இவ்விஷயம் சந்நிதானத்திற்கு முக்கியமான காரியமும் அதி சுலபமும் ஆஞ்ஞை மாத்திரத்தால் முடிவுபெறத்தக்கதா யிருக்கிறது. இக்காலத்திலோ! ஏதோ ஈசுவரகிருபையால் ஆங்காங்கு பலர் கிறிஸ்துவ மதத்தைக் கண்டிக்கி

[illegible]

ரர்கள். சன்மதங்களை ரக்ஷித்தலல்லவோ சத்துக்களின் தொழில். நம்மதத்திற்கோ! ஙியாயங்கள் வெகுவாக யிருக்கின்றன. திருமாலின் திருமார்பில் கமலப்பிராட்டியார் அமைந்திருப்பது போல், தங்கள் திவ்விய சன்னிதானத்தில் சர்வவித்தைகளும் ஜகத் குருத்துவமும் பொருந்தி யிருக்கின்றதல்லவா? செல்வத்திற் சிறிதேனு மகுறைவில்லை யென்பதும் எல்லோரு மறியற்பாலதே. ஆதலால், தங்கள் ஊழியர்களை ஒவ்வொரு கிராமங்களுக்கு மனுப்பிவித்து வீடொன்றுக்கு ரூபா ஒன்று வசூல்செய்யும்படி தங்களது சந்நிதானத்தில் உத்திரவாகலாம். மதவிஷயங்களில் தங்களது சந்நிதானத்தின் ஆஞ்ஞையைக் கடந்து நடக்கமாட்டார்கள். இனி கிறிஸ்தவர் விஷயத்தில் தாட்சண்யம் வைத்தல் நமக்கழகன்று. கிறிஸதவர்களோ! இத்தேசத்தில் அளற்ற வேலைசெய்திருக்கிறார்கள். இப்பொழுது யாமதை தடுக்கமுயல்வது விசேடமாய் போர்க்களத்தில் ஆயுதப் பயிற்சியை யொக்கும். அந்தோ! கிறிஸ்துவர்களின் உடாயத்தைக்கேண்மின்! இவர்கள் கையிற்சில புத்தகங்களைக் கைக்கொண்டு வீதிகடோறும் நின்று நம்மவர்களைக் கண்டு ஏதோ சிலசங்கதிகளையுபதேசிக்கிறதுபோல் நடிப்புக்காட்டி உபதேசிக்கிறார்களையா! உண்மைவேதத்தை. அசத்தியத்தினிடமும் ஞாயமென்பது சிறிதுமில்லாமலும், ஆரியர்களுக்கு நட்டத்தைக் கொடுக்கத்தக்கதும், நரகத்திற்கு நேர்வழியும், மனக்கலக்கத்தை உண்டாக்குவதும், பல யுத்தங்களால் முன்னுக்கு வந்ததுமான கிறிஸ்துவமத மகா சமுத்திரத்தில் மூழ்கித் தலைதெரியாமலலையும்பலனை யாம் கண்டோமில்லையா? எவ்வளவு பெண்கள் தமதருமை மணவாளனைப்பிரிந்து புலம்புவதைக் கேட்டதில்லையோ? கண்ணுதற்பிரான திருவருளால் தமக்குக்கிட்டிய பிள்ளைகளைக்கிறிஸ்துவர்களுக்குப்பறி கொடுத்து, ஐயோவென்றுக் கதறிப்புலம்பும் தாய்தந்தையர்கள் பல வுளரே! இனியேனும ஸ்ரீமகா சந்நிதானத்தில் இவ்வித விஷயங்களைத் தடுக்க முயலாவிடில் வெகு சீக்கிரத்திலனேகமடங்கள், அநேகவிருதுகள், நாங்கள் எல்லோரும் பாதிரிமார் வலையிற்சிக்குவோமே என்றுமனம் பதறுகின்றது. இக்காலத்திலோ! அனேக பண்டிதர்கள் ஆங்காங்கு கிறிஸ்துவமதத்தைத் தடுக்க முயல்கிறார்கள். இதுவே சமயம். சென்றதைப்பற்றி யாமாலோசிப்பது அநாவசிகம். நமது யஞ்ஞோபவீதலம் மென்மேலும் வளர ஆசீர்வதியுங்கள். சொற்குற்றமுளதாயின் பொருத்தருள்க. அனேக சாஷ்டாங்கத்துடன் எழுதிக்கொண்டது.

இங்ஙனம்

மொழிபெயர்ப்பு. ஓர் மதாபிமானி.

தினகரர் கேள்விக்கு விடை

ஐயா!

சென்ற ஒன்பதாவது ப்ரம்மவித்தியாவின் 116- ம்பக்கத்தில் ஈரோடு தினகரன்என்னும் கையொப்பமிட்டு ஓர் வினாவெழுப்பப்பட்டிருந்தது. அஃதாவது "ப்ரம்மவித்தியா பத்திரிகையின் ஒவ்வொரு விடங்களிலும் சைவ வைணவ விவாதத்தில் விதண்டா வென்கிற ஓர் சொல் ஆங்காங்கு உபயோகிக்கப்படுகிறது. அது எத்தாதுவிலிருந்து உண்டானது? அதற்குப் பொருளென்னை? இஃது சைவ வைணவ விவாதங்களில் மாத்திரம் பிரயோகிக்கத்தக்கதா? இவ் விஷயத்தில் எமக்குண்டாகும் ஆசங்கையைப் பத்திராதிபராவது அல்லது அப்பதத்தை

[illegible]

உபயோகிக்கும் ஏனையராவது விலக்குவாரென வெதிர்பார்க்கிறேன். இனி அப்பதத்தை உபயோகிக்கிறவர்களுள் ஒருவனாகிய யான், எனதறிவிற் கெட்டியவரையில் அப்பதப்பொருளை விளக்கிக்காட்டுவோம். இப்பதம் எல்லாவிவாதங்களிலும் எடுத்துரைக்கப்பாலதாம். இது (வி) என்னுஞ்சொல்லுடன் சேர்ந்த (தண்டு) என்னும்வினைமுற் றப்பகுதியின்மேல் (ஆ) என்னும்விகுதியைச்சேர்க்க விதண்ட என்னும் வினையாலணையும் பெயராகி அதில் பெண்பால்குறியான (ஆ)என்பதைப்பிணைக்க விதண்டா என்னுஞ்சொல்லமைந்தது. (வி)என்பது விபரீதம், மாறுகோடென்று பொருள்கொடுக்கும். தண்டுஎன்பது அடித் தலெனப் பொருள் கொடுக்கும். அதன்மேல்விகுதியின்பொருள் அத்தொழிலைக்கைக்கொள்ள. இங்ஙனமாயின், ஒருவனுரைத்ததற்குமாறாக(வசனத்தில்) அடிக்குந்தொழிலைக்கைக் கொள்ளல். அதாவது.— ஒருவன் தான் சொல்லும் விஷயத்தில் குற்றஞ்சொல்லில், அக்குற்றத்தை அவன் பக்கத்திலேயேசாற்றுதல். இதேபொருளைக்கொண்டு பதினாறு பதார்த்தங்களைக் குறிக்குமிடத்து, இப்பதத்தை கௌதமரிஷி ஞாயசூத்திரத்திலெழுதி யிருக்கிறார். அன்னம்பட்ட ரென்னுமோர் பண்டிதரும் சுவபக்கத்தைத் தாபியாது பரபக்கத்தை மறுத்தலே விதண்டா என்றார். அதுவேயதன் பொருளென்றறிக. கலா வென்பது கலை என்பதுபோல தமிழ்பாஷையில் விதண்டா வென்பது விதண்டை யெனவிளங்கும்.

மொழி பெயர்ப்பு

இங்ஙனம்
கும்பகோணம்
ரா- ஆலாசியநாதஸாஸ்திரி.

ப்ரம்மவித்தியா

சித்ரபாநு ௧௮௮௨ஸு ஏப்ரல்மீ ௩௰வ சனிக்கிழமை.

சம்ஸ்கிருத பாஷை

இராமாயணம்
[முன்தொடர்பு]

ஐயா!

கடந்த பத்திரிகையில் யாமெடுத்துக் காட்டிய சிலகேள்விகளுக்கு விடை யெழுதா தொழிகதோமாதலால், அவைகளைப் பற்றியிங்கு எழுதுவாம். அதில் ''தமிழர் என்பவர் யாவர்? திராவிடர்களுக்கு அறிவு ஊட்டினவர் எவர்?,, என்ற இரண்டு கேள்விகளைப் பற்றி இங்கு விசாரிப்பாம். இதுவிஷயம் இராமாயணத்தைப் படித்தவர்களுக்கும், ஸ்மிருதிகளைக் கண்டவர்களுக்கும் எளிதில் வெளியாகக் கூடுமாயினும், மற்றவர்களுக்குந்தெரியும்படி எடுத்துக்காட்டுவது அவசியமாயிற்று. இத்தேயத்தில் நடுவில் விந்தியமலைத் தொடரை ஓர் எல்லையாக்கி, ஆரியதேசமென்றும் திராவிடதேசமென்று மிருவிதப்பகுபாடு செய்திருக்கின்றார்கள். இக்காலத்தவருட்சிலர், தென்னாட்டிலுள்ள தமிழர்கள் அல்லவென்றும், வடநாட்டார்களே ஆரியர்களென்றுஞ்சொல்லி அதற்குச்சில காரணங்களையுங் காட்டுகின்றார்கள். அவையாவன:—இத்தேசத்திற்கும் அத்தேசத்திற்கும் பெயர் வேற்றுமையொன்று. இத்தேசத்தவர்கட்கு மத்தேசத்தி

[illegible]

வர்கட்கும் ஆசாரவேற்றுமை வழக்குஞ் சொல்வேற்றுமை இவையே. இதற்குச் சில கதையையுஞ் சொல்லுகின்றார்கள். இத்தேசத்தில் முன் வசித்த அநாரியர்களான இராக்கதரென்னுமோர் சாரீனரது வம்சத்தினர் இக்காலத்துத் தென்னாட்டாரென்றும் அவரது குசாக்கிரபுத்தியினாலூகிக்கின்றனராம். இவையெல்லாம் நம் தேசத்தில் முன்னரவதரித்த முன்னோர்களியற்றியநூல்களை ஆராயாத குற்றமே. இவ்விஷயத்தில் ஸ்ரீமத் ராமாயணம் உத்திரகாண்டத்தில், சம்புகன் என்னுமொருவனை சங்கரித்து, உடனே ஸ்ரீமத் அகஸ்தியரைக் காணக்கருதி அவரது ஆச்சிரமத்திற்கு இராமன்செல்ல, அங்கு அகத்தியர் ஸ்ரீஇராமனுக்குரைத்த சிலவசனங்களால் சொற்பபாகம் வெளியாகின்றது அதாவது.— "முன் விந்திய மலையின் தென்பாகமாகிய வித்தேசம், இராக்கதர்களென்கிற ஓரநாரியர்களால் தன்வசமாக்கப்பட்ட பெரியஆரண்யமென்றும், பிறகு மனுவின்புத்திரனாகிய தண்டகன் என்னுமரசன் தன்தகப்பனிடம் காட்டைத் தன்வசமாகப்பெற்று அதை வெகுதூரமழித்து, அதில் பலநகரங்களை உண்டாக்கி, சுக்கிரபகவானைக் குருவாக்கிக்கொண்டு, ஆரியாவர்த்தத்தி லிருந்த பலரை அங்கு வரவழைத்து அவர்களுடன் கூட அரசாண்டானென்றும், பிறகு ஒருக்கால் அவ்வரசன் காமவெறிகொண்டு சுக்கிரன் குமாரத்தியாகிய அனலை என்பவளைக்கற் பழிக்க, அதைககண்டு கோபமூண்ட சுக்கிரனது சாபத்தால் ஏழுதினம் மண்மாரி பெய்துமடிந்தது அத்தேசமென்றும், பிறகு அங்குமுன் குடியேறிய பல ஆரியர்கள் சிதறுண்டு தென்னாடுகளில பலவிடங்களில் புகுந்தார்களென்றும், அதுமுதலே அதற்குத் தண்டகாரண்யமெனப்பெயரென்றும், அவ்விடத்திற்கு அகத்தியர் ஏதோ காரணவிஷயத்தால் வந்துசேர்ந்தாரென்றும்" புலப்படுகின்றது. ஆரண்யகாண்டத்திலோ! இக்கதையின் றொடர்பு காணப்பெறுகிய ஸ்ரீஇராமனை நோக்கி அதே அகத்தியமுனி சொன்னதாக இவ்விஷயத்தின்பிற்பாகம் வெளியாகின்றது. அங்கு "அகத்தியமகாமுனிவர் வருங்காலத்துத் தென்னாடு முற்றிலும் பெரும் பாலவனமாயிருந்ததாகவும், அதிலிரண்டொருவிடங்கள்தவிர மற்றவிடங்களில் மரங்கள், மிருகங்கள், பட்சிகள், நதிகள், ஜனங்கள் மற்றேதுமிங்கிடைப்பதரிதென்றும், அவ்விடத்தில அவர்தமதுசிடர்களான அநேகரைக்கொண்டு நதிகளைப்பல வுண்டாக்கியும், பூமியைப்பலசீர்திருத்தியும், அநேக செடி கொடிகளை உண்டாக்கியும், அநேக ஆச்சிரமங்களை கட்டுவித்து ஆங்காங்கு சிதருண்ட ஆரியர்களை யிருக்கச்செய்தும், இத்தேசத்தை மிகவும் செழிக்கச்செய்தா" ரென்றிருக்கின்றது. அதுகொண்டல்லவா இத்தேசம் அகத்திய திக்கென்றும் அவ்வகத்தியமகாமுனிவரே திரவிடர்களுக்குக் குருவென்றும் ஏற்படுகிறது. அம்முனிமணி இத்தேசத்தில் வருங்கால், இத்தென்னாட்டின் விஸ்தீரணம் எவ்வளவிருந்ததோ அவ்வளவு தற்காலம் இல்லையென்பதுண்மையே. ஆகையினாற்றானே, இத்தென்பாஷையாகிய தமிழ்பாஷையை விர்த்திசெய்ய ஓர்சங்கங்கூடி, அது தற்காலம் கன்னியாகுமரி க்ஷேத்திரத்தின் தென்பாகத் திலிருந்ததாகவும், காலக்கிரமத்தில் அவ்விடம் சமுத்திரத்தில் கரைந்துபோய்விட்டதாகவும், அச்சங்கத்தி லொருவராயும் தலைவராயுமுள்ள அகத்திய முனி தமிழ் பாஷைக்கிலக்கண மெழுதியதாயும், சேர சோழ பாண்டியரென்பவர்கள் அவருக்குச் சீடர்களாகவிருந்தார்களென்றும் சொல்லுகிறார்கள். இத்தேசத்திலிருக்கும்

[illegible]

காவேரி தாமிரபருணி முதலிய நதிகளும் அகத்தியரா லுண்டானவையென்றே சொல்லுகின்றார்கள். இது அங்ஙனமேயிருக்கலாம். ஏனெனில், இத்தென்மொழியிற் றமிழெனவும் வடமொழியில் திரவிடமென்றும் பெயர். சிலவிடத்து திராவிடாவென்றுவழங்குவது முண்டு. இச்சொல்லை ஆராயுங்கால், (த்ரு)கைாதல் (இடை)நிலம். இவ்வொழியீற்றிலுள்ள வுகரம, புணர்ச்சியில் அவ் வெனத்திரிப, திரவிடமென ஏற்படுகிறது. அவ்வகரம் மகரமாய் மருவ திரவிடமென்றும், பிராகிருதத்தில் தமிளாரவென்றும், அதுவே தென்மொழியில் தமிழ் என்றாகியிருக்க வேண்டும். ஆயின் இம்மொழியை முதலில வழங்கியவர்தண்டகராஜனது இராச்சியத்தை விட்டகன்று தென்னாட்டிற் சிதறுண்டுபோன ஆரியர்களே என்று வெளியாகிறபடியால், இத்தென்னாட்டாரை அநாரியரென்றுவது, இத்தென்மொழியை அநாரிபபாஷையென்றுவதுஞ் சொல்லுதல் மறக்கப்பட்டதென்றறிக. தமிழ் என்னுஞ் சொற்றிற்கும் சரியான மூலம் தென்மொழியில் அகப்படாமையால் வடமொழியென்றே எடுத்துரைத்தோம். இவர்களுக்கு ஆசார வேற்றுமைப்பட்டதும் தேசகால வேற்றுமைகளா லென்றறிக. ஆதலால் வடநாட்டாரியர்களே இத்தேசத்தில் குடியேறினவர்களென்று புலப்படுகின்றது. நம் முன்னோர்களாகிய தென்னாட்டவர் மனுமுதலியவரியற்றிய தர்மசாஸ்திரங்களைக் கைகொண்டவர்கள் ஆரியர்களுக்கு முன்னிருந்த அநாரியர்களென்னு மிராக்கதர்கள் அநேகமாய் ஸ்ரீராமனு லொழிந்தார்களென்றும், பின்னனாரியர்களான மிலேச்சயவனர்கள் அக்காலத்திலே உண்டானவர்களென்றும், அயோத்தியா காண்டத்தில் (3) சுவர்க்கத்தில் மிலேச்னென்னுஞ் சொல்லிருப்பதால் கிஷ்கிந்தா காண்டத்தில் (63) சுவர்க்கத்தில் யவனரென்னுஞ்சொல்லாலும் இனி அறிகிறோம். யவனமிலேச்சர்களைப்பற்றி விசாரிப்பாம். மிலேச்சர் என்னுஞ்சொல், மிலேச்ச என்னும் பகுதியினின்றே உண்டாகிறது. அப்பகுதியின் பொருள் இலக்கணவழுவுள்ள சொற்களைச்சொல்லுதல். அதுகொண்டே மாபாடியம் எழுதிய பதஞ்சலிமுனிவர் "மிலேச்சத்திற்கூடாது" என்பதற்கு "வழுச்சொற்களை எச்சரித்தல்கூடா" தென்றுரைசெய்தார். வேதத்தில் வாஜசநேயசம்ஹிதையில் "மிலேச்சனும் செய்யற்க, குற்றமுள்ளசொற்களை சொல்லற்க" என்றிருக்கின்றது. இவைகளையெல்லமாராய்ந்த ஸ்ரீமான் நாகேசபட்டாசாரியரென்பவர் தாம் எழுதிய மஞ்சூஷை என்னுங்கிரந்தத்தில் "மிலேச்சன் என்பவன் வழுச்சொற்களைச் சொல்லுபவ" ரென்றார் ஆதலால் பொதுவாக பொருட்டமோட்டததால் சொற்களை மாற்றுபவன் மிலேச்சனென வேற்பட்டது. நம்தேசத்து தர்மசாஸ்திரக்காரர்களோ! "கோமாம்சத்தைப் புசிப்பவன் மிலேச்சனென்று, கோமாம்சம் புசிப்பவர்களுக்கு மிலேச்சரென இடுகுறிப்பெயரிட்டிருக்கிறார்கள். ஆதலால், ஆரியர்கள் ஆசாரத்தைக் கடந்து, ஆரியர்களின் பாஷைகளில் வேறுபட்டவர்கள் மிலேச்சரெனத்தெரியவருகிறது. இவர்கள் வெகுகாலம்வரையில் வடமொழிச்சொற்களையே பொருட்டமோட்டமாய் உபயோகித்து வந்தார்களென்று வெளியாகின்றது. எங்ஙனமெனில், ஜைமுனி மகரிஷி தாமெழுதிய கருமமீமாஞ்சா சாத்திரத்தில் 'யவம், வராகம், பர்ஹிஸ், ஆசயம்' முதலியபலசொற்கள் ஆரியர்களால் ஓர் பொருளினிடத்தும், மிலேச்சர்களால் மற்றோர்பொருள்களினிடத்தும் விநியோகிக்கப்படுதலால் இச்சொற்களுக்கு

[illegible]

[illegible]

[illegible]

உண்மைப்பொருளிஃதெனவிளக்கக்கருதி, ஆரியன் மிலேச்சாதிகரணம் என்றும், "பர்ஹிராச்சியாதிகரண,, மென்னுமிரண்டு ப்ரகரணங்களை வெழுதி முடித்திருக்கின்றார் அதுகொண்டே உலகத்தில் சொற்களுக்கும் பொருள்வழக்கத்தினாற்றானே அறியவேண்டு மாதலால், அவ்வழக்கம் வேதங்களிலிருந்தாலும், ஆரியர்களிட மிருந்தாலும், மிலேச்சர்களிட மிருந்தாலும் எடுக்குங்குற்றமில்லை யென்று நியாயசாஸ்திர பாஷ்யக்காரருரைத்தார். பிறகு யாமாலோசிப்பதி யாதெனில், மிலேச்சர் கொண்ட பாஷையே வடமொழிக்கு மூதற்றிருப்பு. அம்மிலேச்ச பாஷை இக்காலத்துபாஷை யிலின்னதெனத்துணியக் கூடாதாயினும் அதேபாஷை காலஞ்சென்று மருவி வேறுபாஷைகளாய இந்துஸ்தானி முதலிய பாஷைகளில் கலந்திருக்கலாமென்று யெண்ணத்தக்கதாயிருக்கின்றது. யவனர்களுக்கும் முந்தியவர்கள மிலேச்சர்களே. மிலேச்சர்கள், யவனர்களித்தேசத்திற்கு வருவதற்கு முன்னரே யித்தேசத்தில் புகுந்தார்களென்று தெரியவருகிறது இராமாயணத்தில், கிஷ்கிந்தா காண்டத்தில் இமயமலையினமேற்புரத்தில் யவனர்களிருந்ததாகவும், அயோத்தியாகாண்டத்தில் மிலேச்சர்களித்தேசத்தவருடன் கலந்திருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் இராமாயணகாலத்தில் சம்ஸ்கிருதம், தமிழ், மிலேச்சபாஷை இம்மூன்று மிருந்திருக்கவேண்டும். ஆகையினாற்றான் இராமாயணம் ஆரண்யகாண்டத்தில் "இல்வலன் சம்ஸ்கிருதத்தைச் சொன்னான்,, என்றிருக்கின்றது. அக்காலத்தில் வடமொழியை நீக்கி வேறுசொற்களில்லாவிடில், அவன் சம்ஸ்கிருதத்தைச்சொன்னானென்றெழுத வேண்டியது அவசியமில்லையல்லவா? இவைகளால் இராமாயண காலத்தில் வேறுபாஷை யிருந்தது தோற்றாவிருப்பினும், வேறுசில பாஷைகளிருந்ததாகவே ஊகிக்கத்தக்கதாயிருக்கின்றது. இனி யவனர்களுடைய ஸ்வரூபத்தையும், அவர்களுக்கும் நம்மவர்களுக்குமுள்ள ஆசாரஒற்றுமையையும், வைதிகங்களிலுள்ள ஒற்றுமையையும், வேற்றுமையடையும் விஷயங்களையும், அதர்வணவேத சம்பந்த முள்ளவர்களவர்களென்பதையும்பற்றி மற்றோரிடத்தில் காட்டுவோம். இவையெல்லாம் ஸ்ரீஇராமாயணத்திற்கு சம்பந்தப்படாத விஷயங்களாதலால், இவைகளைப்பற்றி யீண்டெழுதுவது உசிதமல்லவென்று யிம்மட்டில் விட்டோம். இன்னும்வரும்

ஸ்ரீஹர்ஷகவி சரித்திரம்

ஐயா!

நம் பத்திரிகா நண்பர்களில் ஸ்ரீமான் உதயவர்மராஜா முதலியபலர், பண்டிதர்களின் மணியாய ஸ்ரீமத் ஸ்ரீஹர்ஷகவியின் திவ்ய சரித்திரத்தைப்பற்றி அறியவிரும்புகிறார்கள். ஆகையால், யாமறிந்தமட்டில் அவரது சரித்திரத்தை விளக்கிஎழுதப்புகுந்தோம். இப்பரதகண்டத்தில் ஸ்ரீஹர்ஷன் எனப்பெயர்வகித்த இரண்டுகவிஞர்களிருந்தார்கள். அவர்களுள் ஒருவன பிராமணன், மற்றொருவன் க்ஷத்திரியன். அதில்முதல்வன், நைடதம், கண்டனகண்டகாத்தியம் முதலியபல கிரந்தங்களை எழுதினவன். மற்றொருவனோ' புஷ்பபூதி யென்னும் அரசனது குமாரன். அவ்வரசனது சரித்திரம் பட்டபாணகவியியற்றிய ஸ்ரீஹர்ஷ சரித்திரமென்றக் கிரந்தத்தில் உள.

[illegible]

அவ்வரசனது சபையின் கண்ணிருந்தாவகன் ஏன்னும் ஓர் "ஶௌத்தசவி "நாகாநந்தம், ரத்நாவளி, பிரியதரிசிகை என்கிற மூன்று காவியங்களையியற்றி அவ்வரசன் பெயரால் வெளியிட்டாரென்றும், அதனாற்றிவியலாபத்தையடைந்தாரென்றும், காவியப்பிரகாசக்காரராகிய ஸ்ரீமான் மகாமகோபாத்தியாய மம்மடபட்டரவர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். ஆதலால் பிராமணஸ்ரீகர்ஷனது சரித்திரத்தையே நீட்டிக்காட்ட வேண்டியது அவரது கொள்கையென்றறிகிறோம். அச்சிரீஅர்டர், (சாரஸ்வதர், கானியகுப்ஜர், மைதிலர், உர்க்கலர், கௌடர்)என ஐவகை கௌடப்பிராமணர்களில் கானியகுப்ஜமென்கிற ஓர்வம்சத்தவர்- இவரது தகப்பன் ஸ்ரீஹீரர். தாயோ மாமல்லா. ஸ்ரீமநுஷ்க்கமணுளனை ஸ்ரீசிந்தாமணிஎன்னுமோர் மந்திரத்தால் ஆராதித்து அவரது திருவருளால் சர்வ வித்தைகளையும் பெற்றவர். அவரைப்பற்றிய இதிஹாசமிது. முற்காலத்தில் ஸ்ரீஹீரகவி பலவிடங்களிலுமுள்ள புலவர்களை ஜயிக்கக் கருதி அங்ஙனஞ் செய்துகொண்டு வருகையில், ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தின்கண்ணுள்ள பண்டிதர்களவனை வென்று விட்டார்கள். உடனே பொறாமையால் ஆகாரத்தை வெறுத்து உயிரைத்துறந்தார். அவரது பபத்தினியானமாமல்லை,தமது நாயகனை வென்ற வித்துவான்களைத் தமது குமாரனைக்கொண்டு வெல்லும்படி சங்கற்பித்து, தமக்குத்தன் நாயகன் உபதேசித்த சிந்தாமணி என்னுமந்திரத்தைத் தமது குமாரனுக்கு உபதேசித்தருளி கடுமையாய் தமது குழந்தையைத் தவம்புரியச்செய்து பரமசிவனது திருவருளால் மகாபண்டிதனுக்கித் தமது கோறிக்கையை நிறைவேற்றினள். அப்பொழுது சமஸ்தபண்டிதர்களின் மதத்தையும் கண்டித்தபடியால், அவனுக்குக் கண்டனக்காரனெனப்பெயருண்டாயிற்று. அச்சிரீஹர்ஷகவி உலகத்திலுள்ள எல்லாப்பணடிதரையும் வெல்லவேண்டி, இத்தேசத்தில்பண்டுதொட்டுவரும் அறுவகை ஆத்திகத்தையும் நாத்திகத்தையும் கண்டித்தார். பிறகுதன்சரீரதத்தில் உண்டாகிய வெண்குட்டரோகத்தை விலக்கக்கருதி, உத்தமசிலோகனாகிய நளமகாராஜாவினது சரித்திரத்தை நைடதகாவியமென ஓர்காவியமெழுதினர். பிறகு எல்லா பண்டிதர்களையும் வென்று கானியகுப்ஜராச்சியத்தின ரசரிடம் இரட்டைத்தாம்பூலமும் ஓர் சிம்மாசனமும் விருதாகப்பெற்றனர். இவ்விஷயத்தைப்பற்றித் தாம் எழுதிய கண்டனக்கிரந்தத்தில் "கானியகுப் ஜனரசரிடம் இரட்டைத்தாம்பூலமும் ஆசனமும்பெறுகிறு,,னென்றுஎழுதியிருப்பதில் வெளியாகின்றது. அவனது பெற்றோர்கள் பெயரும், அவன் சிந்தாமணியென்னுமந்திரத்தையுபாசித்ததும், அவரேயியற்றிய நைடதமென்னுங்காவியத்தில் ஒவ்வொரு சுவர்க்கத்திலும் இறுதியிலுள்ள சுலோகத்தால் புலப்படுகின்றன. அவர் கண்டன கிரந்தமெழுதியது அதேநைடதப்புத்தகத்தில் 6வது சுவர்க்கத்தின் கடையில் "இச்சர்க்கம் கண்டன கண்டத்திலும் இனிது ,,என்றிருப்பதையறியலாம். அக்கண்டனக் கிரந்தம் கௌடதேயத்தில் மிகப்பிரசித்திபெற்றது. அதேபுத்தகத்தில் அறுவகைநாத்திகங்களும் நன்கு நிரூபிக்கப்பட்டு மறுக்கப்பட்டிருக்கின்றன. பிறகு அவர் இப்பாரதகண்டத்தில் திக்விஜயஞ்செய்துவரும் சங்கர பகவத்பாதாசாரியாரவர்களுடன் வாதஞ்செய்து தோல்வியடைந்து அவருக்குச்சிடாரிய், தாம் எழுதிய கண்டனகிரந்தத்திற்கிறுதியில் சங்கராசாரி பணியின சம்பந்தமான அத்துவிதத்தை எழுதினதாகவொப்பினர்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இவ்விஷயம் வித்தியாரண்யமுனிவரியற்றிய சங்கரவிஜயமென்னுங்கிரந்தம் பதினாறாவது சுவர்க்கத்தில் "அநேகயுக்திகளால் சர்வசாஸ்திரங்களையும் கண்டித்து பிரபாகரர், பட்டர் உதயனர் முதலியவர்களால் வெல்லப்படாத கொழுத்த கண்டனக்காரரை வெகுகாலம் விவாதஞ்செய்து தமது சீடராக்கினார்" என்றிருப்பதில் புலப்படுகிறது. இதனால், ஸ்ரீமத் உதயனாசாரியர் முதலிய முன்னோர்களும் இவர்களும் சமகாலமென்று ஏற்படுகிறது. இவருக்கு உபாசனாதேவதை நமது கண்ணுதற்பிரான். அதுகொண்டே எல்லா மதங்களையும் கண்டிக்கத் தொடங்கிய கண்டனக் கிரந்தத்தின் முகத்திலும் "நிர்விகல்ப சமாதியின் விஷயன் ஒருவன் தாணு புருடன், இச்சொற்களால் வேதங்களில் வழங்கப்படுவான். தமது அபின்ன சிற்சக்தியாகிய உமையுடன் கூடியவன் அநுமானத்தாலறியத்தக்கவன் எவனோ, அவனைவழிபடுவேன்" என்றார். இதனாலும், அக்கிரந்தத்தினிறுதியில் அத்துவைதத்தைத் தாபித்ததாலும் இவன் சிவாத்துவைதி எனவெளியாகின்றது. இவ்விதமே நாத்திகமதத்தை வேரறுடன் களையக்கருவியாய ஞாயகுசுமாஞ்சலி என்னுங் கிரந்தத்தை யியற்றிய உதயனாசாரியரது ஹிருதயமும் வெளியாகின்றது. அவர் ஞாயகுசுமாஞ்சலியில் "மற்றவர்களாலென்ன பயன், எமக்குப் பரமசிவனேகதி" என்றார். இதனால் அவர் தாம்வழிபடுங் கடவுளின் சுவரூபத்தை விளக்கினாரல்லவா? இவ்விதமே இத்தேயத்தில், ஸ்ரீவாசஸ்பதிமிச்ரர் முதலியபலருண்டென்பது அவர் சரித்திரத்தால் தெற்றெனவிளக்கும். அதிகவிஷயத்தை ஏனையவித்துவான்கள் வெளிப்படுத்துவாரென எதிர்பார்க்கிறோம்.

குறிப்பு.

ஐயா, நமதுபத்திரிகையில் இம்முறையில் வெளிப்பட்ட பாகவதர்விஷயமான உபன்னியாசத்திலும், மடாதிபதிகள் விஷயமாய் உபன்னியசித்ததிலும் சிறிதுவரையவேண்டியது எமக்குண்டு. அவைகளை இம்முறை அவகாசமில்லாததால் நிறுத்தினோம். மறுமுறை வரும்.

கடிதங்கள்.

கடிதக்காரர் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் பாத்தியரல்லர்.

இந்துவுக்கும் பாதிரிக்கும் சம்பாஷணை.

ஐயா,

என்னை நெடுநாளாகக் கிறிஸ்துமதமாக்க எண்ணியிருந்த ஓர் அங்கிலேயபாதிரியார், ஒருநாள் கிறிஸ்துமதத்தில் சேரும்படி வருந்தி அழைத்தார். நான், கிறிஸ்துமதம் அவ்வளவு சிரேஷ்டமதமா வென்றேன்; அதற்கென்ன சந்தேகமா வென்றார். ஆனால் எனது சந்தேகங்களைத் தீரும், தீர்த்தால் யான்மாத்திரமன்று; என்குடும்பத்தாருடனே வருகின்றேன் என்றேன். என் குடும்பத்தில் பத்துப்பேர்வரையி லிருக்கின்றனரென அவர்க்கு முன்பே கூறியிருக்கின்றேனாதலால் அவர், வெகுசந்தோஷத்தோடு எனது சந்தேகங்களை விரைவில் சொல்லும்படி கேட்டார். நான் பைபிலைச்சும்மா நம்பமாட்டேன்; நியாயங்காட்டினா

[illegible]

ல்தான் நம்புவேன்என்றேன் பாதிரியார். அப்படியே ஆகட்டுமென்றார். இரண்டு மத்தியஸ்தர்கள் வேண்டுமென்றேன் மத்தியஸ்தர்கள் என்னத்துக்கென்றார். இருவர்பக்ஷத்திலுமுள்ள நியாயங்களை எடுத்துச்சொல்லவேண்டுமே என்றேன். வேண்டாம் வேண்டாம் என்றார். நான் அவர்ஸ்கூலில் உபாத்தியாயரானமையால் சரியென்று ஒத்துக்கொள்ளவேண்டியதாய் நேரிட்டது. பிறகுநடந்த வாதங்களைக்காண்க:—

இந்து. பாதிரியாரே! கடவுள் ரூபியா? அருபியா?

பாதிரி. அருபி.

இந்து. கடவுள் தமதுசாயலாக ஆதியில் மனிதனைச் சிருஷ்டித்ததாய்ப்பைபில் கூறுகின்றதே. கடவுள்சாயல் மனிதனென்றால் மனிதனைப்போல் கடவுளும் ரூபியாகவேண்டுமே.

பாதிரி. அருபியாகவுமிருப்பார்; ரூபியாகவுமிருப்பார்.

இந்து. முன்பு கடவுள் ரூபியா அருபியாவெனக் கேட்டபோது, அருபியென்று அங்குசொல்லி, இங்கு அருபி ரூபியென இரண்டுஞ் சொல்லுகின்றீரே. இரண்டில் எதைச்சரியென நம்புவது?

பாதிரி. பின சொன்னதே சரி.

இந்து. முன் சொன்னதே சரியென மற்றொருமுறை சொல்வீரோ?

பாதிரி. பின்பு எப்படியாகுமோ வென்றாலோசித்து இனியாது செய்வதெனத்துணிந்து இல்லையெனறார்.

இந்து. உமதுபைபில் கடவுள், அருபி அருபியென்று பலவிடத்துஞ் சொல்லியிருக்கின்றதே; அப்படியிருக்க அருபி ரூபியென்று இரண்டுஞ் சொல்லலாமா?

பாதிரி. அப்படியிருபபதால் சொல்லலாம்.

இந்து. அவர், ஆதாமைப் பண்ணும்போது ரூபியாகத்தானேயிருந்தார்.

பாதிரி ஆம்.

இந்து. ஆதாம் கண்ணுக்குப்புலப்பட்டது கடவுளுடைய சரீரமா? வெறொன்றா?

பாதிரி. சரீரமே.

இந்து. நமதுசரீரமும் ஆத்துமாவும் ஒன்றா? இரண்டா?

பாதிரி. இரண்டு.

இந்து. சரீரம் வேறு, ஆத்துமா வேறுதானே.

பாதிரி. வேறுதான்.

இந்து. சரீரம் ரூபியா? அருபியா?

பாதிரி. ரூபி.

இந்து. ஆத்துமா ரூபியா? அருபியா?

பாதிரி. அருபி.

இந்து. சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் ஒருஉவமானஞ்சொலலும்.

பாதிரி. கூண்டும் கூண்டிலுள்ள கிளியும்போல.

இந்து. தான் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் ஆத்துமாவா? சரீரமா?

பாதிரி. ஆத்துமாதான்.

இந்து. கடவுளுடைய ஆத்துமா அவரா? அவர்சரீரம் அவரா?

பாதிரி. ஆத்துமாதான் அவர்.

இந்து. முன்பு கடவுள் அருபியும் ரூபியுமென்றீரே. ஷை இ

𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍍-
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. 𑌕𑌿𑌂 [illegible]?
𑌪𑌾. 𑌤𑌥𑍈𑌵.
𑌹𑌿. 𑌕𑌿𑌂 [illegible]
𑌪𑌾. 𑌤𑌥𑌾.
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. 𑌤𑌥𑍈𑌵.
𑌹𑌿. [illegible]?
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. ([illegible]) ([illegible])
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. [illegible]
𑌹𑌿. [illegible]
𑌪𑌾. ([illegible])

ண்டுள் எதுமுன்? எதுபின்?

பாதிரி. முன் பின் னுரைக்கப்படாது.

இந்து. இரண்டும் எப்போதும் உள்ளனவோ?

பாதிரி. ஆம்.

இந்து. கடவுளுக்கு ரூபம் அரூபம் இவ்விரண்டும் இலக்கணமோ?

பாதிரி. ஆம்.

இந்து. ரூபம் அரூபம் இவ்விரண்டும் நேர் விரோதமான தர்மமல்லவா?

பாதிரி. ஆம்.

இந்து. நேர் விரோதமான தர்மம் ஒருபொருளின்கணிருப்பதுகூடுமோ?

பாதிரி. கூடாது.

இந்து. கடவுளின்கண் ரூபம் அரூபமான மறுதலைப்பட்டவிரண்டு குணங்கள் எங்ஙனமிருத்தல் கூடும்?

பாதிரி. பேசவில்லை.

இந்து. நமது சரீரத்துக்குளிருக்கும் ஆத்துமா, சரீத்துக்குள் மாத்திரமிருக்குமா? சரீரத்தைவிட்டப்புரமிருக்குமா?

பாதிரி. சரீரத்துக்குள் மாத்திரமிருக்கும்.

இந்து. மண்ணையெடுத்து ஆதாமைச்சிருஷ்டிக்கச் சரீரத்தோடுவந்தகடவுளுடைய ஆத்துமா, அவருடைய சரீரத்துக்குள் மாத்திர மிருக்குமா? அப்புரங்கூடவிருக்குமா? (கடவுளென்னுஞ்சொல்லுக்குப் பொருள் ஆத்துமாவென முன் சொன்னது ஞாபகத்திலிருக்கட்டும்.)

பாதிரி. ஆத்துமா சரீரத்துக்குள் மாத்திரந்தானிருக்கவேண்டியது. கடவுளுடயை ஆத்துமாமாத்திரம் அங்ஙனமன்று; எங்கும் நிறைந்ததே.

இந்து. நியாயங்கடந்து பேசுகின்றீரே.

பாதிரி. கடவுள் பரிபூரணரென் றுரைப்பதால் அங்ஙனங்கூற வேண்டியதாகின்றது.

இந்து. பைபில் சொல்வதினால்மாத்திரம் சொல்லுகின்றீரேயன்றி, நியாயவரம்பக் குட்படவில்லையே.

பாதிரி. எந்தமதஸ்தரும் இதற்கு உத்தரவு சொல்லமாட்டார்கள்.

இந்து எல்லாமதங்களும் பொய், கிறிஸ்துமதம் ஒன்றே மெய்யென்றுகூறும் கிறிஸ்தவர்கள், மற்றபொய் மதஸ்தர்கள் சொல்லவில்லையென் றுரைக்கவேண்டிய அவசியமில்லையே; பொய்மதஸ்தர் சொல்லாததுபோல் மெய்மதஸ்தரும் சொல்லாவிடில் மெய்மதமென் றுரைப்பதில் விசேஷம் யாது? மொட்டைத்தலையுடையவளைக் கூந்தலழகி யென்பதற்கு ஒக்குமே.

பாதிரி பேசவில்லை.

இந்து. கடவுளுக்கு அரூபம் ரூபம் இரண்டும் இலக்கணமாகச் சொல்லி, கடவுளுடைய ஸ்வரூபம் ஆத்துமாவென்றும் அவ்வாத்துமா அரூபமென்றும் அவருடை சரீரம் ரூபமென்றும் அது அவரல்லவென்று முரைத்தால் கடவுளுக்கு அரூபம் ரூபம் எப்படிச்சித்திக்கும்?

பாதிரி. அரூபம் ஒன்றுமாத்திரந்தான் சித்திக்கும்.

இந்து. கடவுளுக்கு அரூபம் ரூபம் இவ்விரண்டு முண்டெனச் சொல்லி, அதைமாற்றிப்பேசுவதில்லையென்று முன் புரைத்தீரே.

[illegible]

பாதிரி. பேசவில்லை.

இந்து. கடவுள் உலகத்தைச் சிருஷ்டிப்பதற்கு முன்பு கடவுள்மாத்திரந்தானே யிருந்தார்?

பாதிரி. ஆம்.

இந்து. அப்போது உலகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்னும் எண்ணம் முன்பு உண்டாய்த்தானே பின்பு உலகத்தைச் சிருஷ்டித்திருக்கவேண்டும்?

பாதிரி. ஆம்.

இந்து. உலக சிருஷ்டிக்குமுன் கடவுளிடத்தில் எண்ணமிருந்ததல்லவா?

பாதிரி. ஆம்.

இந்து. விஷயமில்லாமல் எண்ணம் எப்படி உதிக்கும்? உலகமின்றி விஷயம் இராதே?

பாதிரி 10. மினிட்வரையில் யோசித்து இதற்கு உத்தரவுசொல்ல நம்மாலாகாது; கடவுளுக்குத்தான் தெரியுமென்றார்.

இந்து. கடவுளுக்குத் தெரிந்தால் தெரியட்டும்; நியாயமென்றுநாம் ஒப்புக்கொள்ளப்படாதே.

பாதிரி. கடவுள் வாக்கியம் எப்படி யிருந்தாலும் நியாயமாகத்தான் அங்கீகரிக்க வேண்டும்.

இந்து. ஒவ்வொருமதஸ்தருமிவ்வண்ண முரைப்பாராளுல் அம்மதங்களெல்லாம் பொய்யென்றும் உமது மதமாத்திரம் மெய்யென்றும் எவ்வாறு கூறலாம்?

பாதிரி. கிறிஸ்த்துமதம் சத்திய மதமாகையால் கூறலாம்,

இந்து. ஒவ்வொரு மதஸ்தரும் தத்தம்மதமே சத்தியமென்றுரைக்கின்றார்களே.

பாதிரி. கிறிஸ்துமதம் சத்தியமத மாகையால்தான் எங்கும் பரவி யிருக்கின்றது.

இந்து. இங்கிலாந்தில் 1200. வருஷத்துக்குமுன் பரவாமலிருந்தபோது அது அசத்தியமதமா யிருந்ததோ? உலகில் அசத்தியமானது, சத்தியத்தைப் பார்க்கிலும் எத்தனையோபங்கு அதிகமாய்ப் பரவியிருக்கின்றமையால் அதுவே உத்தமமென்று கொள்ளலாமா? நிற்க. கிறிஸ்துமதம் பரவினது, அரசன்மற்றவர்க்கு அநியாயமான சட்டம் பிறப்பித்தமையாலும், காசுகையுறுத்தல், தீயில் போட்டுக்கொளுத்தல், சித்திரவதை செய்தல், பொருளைத்தால், ராஜ்ஜியத்தைக்கொடுத்தல், மாத ரைகுதல் ஜெயிலில் போடல், மொட்டையடித்தல் பைபிளுக்குவிரோதமான சாஸ்திரங்களை அக்கினிக்கிரையாக்கல் முதலியவற்றலென அனேக இங்கிலீஷ் புத்தகங்களும் சரித்திரப்புத்தகங்களும் "ஏசுகிறிஸ்து மனிதனே" என்னும்அரையணு விலையுள்ள 3 பாரப்புத்தகமும் கூறுகின்றனவே. ஒருவனுவது இதர மதங்களைத் தத்துவ சோதனை செய்து குற்றங்காணபித்து கிறிஸ்துமதத்தால் கண்டனேகூறிக் குணங்களை யெடுத்துக்காண்பித்து, கிறிஸ்துமதத்திற்குச் சொல்லவில்லையே. கிறிஸ்த்துமதம் தத்துவ விஷயங்களைப்பற்றிச் சொல்லவுமில்லையே.

பாதிரி. தத்துவத்திற்கும் மதத்திற்கும் பொருந்தாது.

(இன்னும் வரும்)

Printed and Published for the Proprietor,
at the Brahmavidya Press Chidambaram.

ப்ரம்மவித்தியா.

அநுபந்தம்.

[illegible] நீதி

—()—

௨௧. [illegible]

௨௨. [illegible]

௨௩. [illegible]

௨௪. [illegible]

௨௫. [illegible]

௨௬. [illegible]

௨௭. [illegible]

௨௮. [illegible]

௨௯. [illegible]

௩௦. [illegible]

௩௧. [illegible]

௩௨. [illegible]

௩௩. [illegible]

௩௪. [illegible]

௩௫. [illegible]

௩௬. [illegible]

௩௭. [illegible]

௩௮. [illegible]

௩௯. [illegible]

௪௦. [illegible]

௪௧. [illegible]

௪௨. [illegible]

௪௩. [illegible]

௪௪. [illegible]

௪௫. [illegible]

௪௬. [illegible]

௪௭. [illegible]

௪௮. [illegible]

௪௯. [illegible]

௫௦. [illegible]

௫௧. [illegible]

௫௨. [illegible]

௫௩. [illegible]

௫௪. [illegible]

௫௫. [illegible]

பாலர் நீதி.

௨௧ மத்தியபானம் மிக்கவமானம்.

௨௨ யவ்வனவழகிலும் டவ்வியமழகு.

௨௩ ரணமோசனமே தனபாலனமாம்.

௨௪ லட்சியம்வைத்தால் கட்சிபலிக்கும்.

௨௫ வஞ்சகமெண்சா னுடலிஞ்சாம்.

௨௬ கற்றவனுயினுந் துஷ்டனைத்தள்ளு.

௨௭ காலையில்விழித்து வேலையைநடத்து.

௨௮ இட்டினபேரைக் கட்டிக்காட்டாய்.

௨௯ கீழ்ப்படிஉனக்கு மேற்பட்டோருக்கு.

௩௰ குணத்திற்கொடியது கோட்சொலத்துணிதல்.

௩௧ கூச்சங்கொள்ளுதல் பேச்சுக்கிடஞ்சல்.

௩௨ கெட்டபேச்சில் இஷ்டங்கொள்ளேல்.

௩௩ கேலிச்சொல்லை நாவில்நவிலேல்.

௩௪ கைப்பொருளாகுங் கல்விப்பொருளே.

௩௫ கொடுமையிற்கொடுமை குணத்தைப்பழித்தல்.

௩௬ கோபந்துடிக்கப் பாவந்தடிக்கும்.

௩௭ கௌரவத்தோடு கௌரிபந்தேடு.

௩௮ சங்கடநோய்க்குச் சகிப்பேஔஷதம்

௩௯ சாகிரதையுடையான் யோக்கியதையடைவான்.

௪௰ சிற்றின்பத்தில் சித்தங்கொள்ளேல்.

௪௧ சீராய்ச்செலவிட் டாருய்ப்பெருக்கு.

௨௨ சுத்தமுண்டாகிற் சுகமுண்டாகும்.

௪௩ சூதாட்டத்தாற் சொத்துச்சேதம்.

௪௪ செல்வச்செருக்கு சிறியோர்போக்கு.

௪௫ சேர்க்கைக்கேற்ற மார்க்கங்கிட்டும்.

௪௬ சைகையறிந்து செய்வதுசமர்த்து.

௪௭ சொன்னசொல்லைச் சோரவிடாதே.

௪௮ சோம்பலுடையான் சோற்றுக்கலைவான்.

௪௯ சௌலப்பியகுணம் சாதுகட்குமணம்.

௫௰ ஞமலிக்கொப்பார் தமதினந்தழுவார்.

௫௧ ஞானம்உதிக்க வான்ருசிக்கும்.

௫௨ தப்பிதநிவர்த்திக் கொப்புதல்தகுதி.

௫௩ தாழ்ந்துநடந்து தகைமைபொருந்து.

௫௪ திருடுக்கையும் சிட்டைக்கைகலம்.

௫௫ தீராக்கோபம் தீயர்சுபாவம்

வரும்.

அறிவிப்பு

சர்வதாரிவருஷத்து

ரிப்பன் தமிழ்ப்பாக்கெட்

பஞ்சாங்கம்-

தயாராயிருக்கிறது.

புத்தகம் 1-இ விலை அணா 6. தபால்பாகின்சார்ஜ் அணா 1. 10இ ஒன்றம் 25 இ 3. ம் 50 இ 7. ம் 100இ 15 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்

சை இரத்தினசெட்டியார்.

புரோப்ரயிட்டர்

மதராஸ் ரிப்பன் பிரெஸ்

316. தம்புசெட்டிவீதி.

சென்னை.

இந்து டிராக்ட் ஸொஸைட்டி.

(இந்த இந்துசங்கம் கலியுகாதி சகூஅசூ-வது சர்வஜித்துவருஷ சித்திரைமூ-த்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

இச்சங்கத்தின் முக்கிய கருத்துகள்:—

(1) இந்துமதத்தைப் பரவச்செய்தல்; அதன் விரோதிகளைக் கண்டித்து அதைப் பாதுகாத்தல். (2) இந்து ஜனங்களுடைய யோககே்ஷமத்திற்காகப் பாடுபடுதல். (3) நீதிமார்க்கங்களையும், கல்விவிஷயங்களையும் ஆதரித்து அபிவிருத்திசெய்தல்.

சுதேசபாஷைகளிலும் இங்கிலீஷிலும் சிறு பத்திரிகை, புத்தகம் இவற்றைப் பரவச்செய்தும், பகிரங்க உபந்நியாசம் புரிவித்தும், வாதம் செய்வித்தும் மேற்படி கருத்துகள் நிறைவேற்றப்படும்.

இச்சங்கத்துக்கு வருஷம் 1-இ சந்தா குறைந்தது ரூபா 1—4—0
(இது முன்பணமாகக் கட்டவேண்டியது.)

அக்கிராசனாதிபதி:—ப்ரம்மஸ்ரீ, ம-ா-ா-ஸ்ரீ, ஆர். சிவசங்கர பாண்டியா அவர்கள், பி-ஏ. எப்-டி-எஸ்.

காரியதரிசி:—ப்ரம்மஸ்ரீ ம-ா-ா-ஸ்ரீ, தீ. வி. பெரியசாமி ஐயரவர்கள்

சுதேசமதாபிமானிகளான இந்துக்கள் யாவரும் இந்த மத சங்கத்திற்குத் திரவியசகாயம் செய்யப் பிரார்த்திக்கப்படுகின்றார்கள். இச்சங்கத்தில் சேர்ந்தவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதியில் இந்துடிராக்ட்ஸொஸைட்டியின் காரியதரிசியவர்கள் பேருக்குத் தபால்சார்ஜுக்காக அரையணாத் தலை அனுப்பினால், ஷெ அக்கிராசனாதிபதி அவர்களால் இயற்றப்பட்ட இந்துமத வினாவிடை யென்னும் புத்தகத்தை யிலவசமாகப் பெறுவார்கள். இச்சங்கத்தைப்பற்றி இன்னும் யாதேனும் கேட்க விரும்புவோர், காரியதரிசியவர்கள் பேருக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

அறிவிப்பு.

கடிதக்காரர் காகிதத்து ஒவ்வோர் புறத்திலே எழுத்துகளைப் பிணைக்காமல் நல்ல மைகொண்டு தெளிவாய் தத்தம் ஊர் பெயரோடு விஷயத்தை எழுதவேண்டும். நட்பேட் கடிதங்களும் லேபில் குறைவாயொட்டி அனுப்பிய கடிதங்களும் அங்கீகரிக்கப்படா. கையெழுத்தில்லாத கடிதமிடம்பெறாது.

ப்- வி- ப.

விசேஷ அறிவிப்பு.

நமது கையொப்பநேயர்களிற் சிலர் மாத்திரம் எமது இனியவேண்டுகோளுக்கிசைந்து தத்தம்பாக்கித்தொகையை அனுப்பினர்கள். மற்றவர் சற்றேனுஞ்செவிகொடாது மௌனத்தையேகைக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். இங்ஙனமாயின் மாசந்தோறும் வேண்டிய தபாற்கூலிக்கும் ஆபீஸ்சிப்பந்தி சம்பளத்திற்கும் பணங்கிடைப்பது எவ்விதம்? இனியாகிலும், நமதுநண்பர்களிதை உணர்ந்து உடனே அனுப்புவார்களென நம்புகிறேன். அன்றியும், இரண்டாவது வருஷம் முடிவுபெற ஒரேமாதமிருப்பதாலும பத்திரிகையை மூன்றாவதுவருஷமுதற்கொண்டு மாதமிருமுறை யாக்க வேண்டுவதாலும் இனி பாக்கி வைத்துக்கொண்டிருப்பது பத்திரிகாபிமானிகளுக்கழகல்ல. இனி பத்திரிகை வேண்டுவோர்க்கு முன்பணங்கட்டினாலன்றி அனுப்பப்படா.

சிதம்பரம்

ஜீவகாருண்ணிய நிரந்தர கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இத்தருமம் இம் மார்கழிமீ அ-உ முதல் ஆரம்பிக்கப்பட்டுச் செவ்வையாகநடந்துவருகிறது. இதன் உத்தேசம் வேலைசெய்ய சக்திபற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சி வார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒரு பெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள கனவான்கள் உதவியிருந்தால் நிலைபெறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன்.

மேற்குறித்த தருமத்தையன்றி இம்மாதமுதல், வெயிலில் வழிநடந்து தாகத்தினால் நாவரண்டு தவித்துக் களைத்து வரும் வழிபோக்கர்களை ஆதரிக்குமபொருட்டு, எத்தருமத்தினுஞ்சிறந்த உத்தமோத்தமதருமமாய கிடைத்தற்கரிய தண்ணீர்ப்பந்தல் தருமமும் வைத்து நடாத்திவருகின்றேன். இத்தருமங்கள் தளர்வின்றி மென்மேலும் ஓங்கத் தருமவான்களாகிய செலவப்பிரபுக்கள் தயைபுரிவாராக.

C. S. நாகமியார்,
கஞ்சித்தொட்டி யாசகர்
சிதம்பரம்.